# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2016 யூலை

# (AA22) கிரயக் கணக்கீடும் அறிக்கையிடலும்

இந்த வினாப்பத்திரம் மொத்தமாக 10 வினாக்களைக் கொண்ட 4 பிரிவுகளாக உள்ளது. இவ்வினாப்பத்திரம் கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புபட்ட அடிப்படைக் கோட்பாடுகளைப் பரீட்சித்துள்ளது. கேட்கப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கோரப்பட்டிருந்தனர். எவ்வாறான விடைகள் எதிர்பார்க்கப் படுகிறது என்பதை கருத்திலெடுப்பதற்கு உதவியாக, பயன்படுத்தப்படுகின்ற வினைச்சொற்களைக் கொண்ட அட்டவணை இவ்வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

10 வினாக்களும் பின்வருமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன :

**பிரிவு A – 20 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 01 அல்லது 02 புள்ளிகளைக் கொண்ட வேறுபட்ட நோக்கச் சோதனை வினாக்கள். இவ்வெல்லா வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

**பிரிவு B – 25 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 05 புள்ளிகளைக் கொண்ட ஐந்து கட்டாய வினாக்கள்.

**பிரிவு C – 30 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்கள்.

**பிரிவு D – 25 புள்ளிகள்**

இரண்டு பகுதிகளை உள்ளடக்கியவாறு ஒரு கட்டாய வினா. பகுதி (A) 13 புள்ளிகளையும், பகுதி (B) – (a) 08 புள்ளிகளையும் பகுதி B – (b) 04 புள்ளிகளையும் கொண்டுள்ளன.

இப்பரீட்சைக்கான வினாப்பத்திரத்தின் தரம் மற்றும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை என்பன திருப்திகரமான மட்டத்தில் இருந்தன. நேர ஒதுக்கீட்டைச் சமாளிக்கக்கூடியதாக இருந்திருந்தமையை பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப் பட்டிருந்த புள்ளிகள், பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வினாவுக்கும் நேரத்தை எவ்வாறு செலவிட வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக அமைந்திருந்தன.

## பிரிவு A

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இந்த வினாக்கள் பிரதானமாக மீள்கட்டளை மட்டம், மேந்தலைக் கிரயத்தின் உறிஞ்சல் போன்ற அடிப்படைக் கிரயக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கணிப்புகள் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தன. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாக்களுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் 20 புள்ளிகளில் 15 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இல. 1.7 இற்கான 4 புள்ளிகளையும் பெறுவதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள், நியம கிரயவியல் முறைமை, கிரயவியல் அடிப்படையிலான செயற்பாடுகள் மற்றும் பூச்சிய அடிப்படையிலான பாதீடு போன்றவற்றில் தெளிவான அறிவினைக் கொண்டிருக்கவில்லை.

சில பரீட்சார்த்திகள் OTQ வகை வினாக்களுக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிராமையும் அவர்களில் சிலர் விடையுடன்சேர்த்து முழு வினாவையும் மீள எழுதியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவர்கள் தேவையற்ற வேலைக்காக அவர்களுடைய நேரத்தைச் செலவிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் இவ்வகை வினைாக்களைக் கையாளும் பொருட்டு கிரயக் கணக்கீட்டின் அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பில் போதிய அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பிரிவு B

**வினா இல. 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பிரதானமாக கூலிக் கிரயத்தின் கீழான ஊதிய முறைகள் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் மணித்தியாலங்களை நிமிடங்களாக மாற்றுவதற்கு தமது நேரத்தை வீணடித்திருந்தனர்.

ஆயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் மணித்தியாலத்திற்கான உபகார வீதத்தினைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். அவர்கள் மேலதிக மணித்தியால எண்ணிக்கையைச் சரியாகக் கண்டுபிடிப்பதற்குத் தவறியிருந்தனர். அவர்கள், மேலதிக உற்பத்தி 20 சட்டைகள் என வெறுமனே பிரயோகித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள், இந்த இலகுவான பாரப்பரப்பில் தமது அறிவினை விருத்திசெய்வதற்கு கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் கற்றல் வழிகாட்டல் புத்தகங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

**வினா இல. 03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) முறையைப் பயன்படுத்தி தொக்குப் பெறுமதியைக் கணிப்பதன் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் FIFO முறையின் கீழ் வழங்கல் கிரயத்தைக் கணிப்பதற்குத் தவறியிருந்தனர். மேலும், மிகச் சில பரீட்சார்த்திகள் தொக்குப் பேரேட்டின் சரியான மாதிரியினைப் பிரயோகித்திருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் வழங்கல் செய்யப்படுகின்ற பொருட்களுக்கான விலையிடல் மற்றும் தொக்குகளுக்கான பெறுமதியிடல் ஆகியவற்றின் வெவ்வேறு முறைகளைப் பயிற்சி செய்தல் வேண்டும்.

**வினா இல. 04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா, உற்பத்திப் பாதீட்டினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவில் கேட்கப்பட்ட விடயத்தைச் சரியாக வாசித்திருக்கவில்லை. இவ்வினாவில் கேட்கப்பட்டதற்குப் பதிலாக நிதிக் கணக்கீட்டின் கீழ் வருகின்ற வியாபாரக் கணக்கினைத் தயாரித்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

சில பரீட்சார்த்திகள் உற்பத்திப் பாதீட்டினைச் சரியாகத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தனர். உற்பத்திப் பாதீட்டைத் தயாரிப்பதற்கு ஆரம்ப மற்றும் இறுதித் தொக்குகளைப் பிரயோகிப்பதற்கான அறிவு அவர்களிடம் காணப்படாமை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்டது.

பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசிப்பதுடன் வினாவுக்கு விடையளிப்பதற்கு முன்னர் அதன் சரியான தேவைப்பாடுகளை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா பணி ஒன்றின் விலையிடல், கிரயமிடல் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது. இந்த வினா பணி ஒன்றிற்காக அறவிடப்படவேண்டிய விலையை கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்காக 2 – 3 புள்ளிகளை மாத்திரமே பெற்றிருந்தனர். மிகச் சில மாணவர்களே இவ்வினாவுக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இங்கு மிகவும் இலகுமானதொரு கணித்தல் கேட்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் பணி மீதான எல்லையினைச் சரியாகக் கணித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பணியின் மொத்த நேர்க் கிரயத்தின்மீது இலாப எல்லையைக் கணித்திருந்தனர். அவர்கள் மேந்தலைகளைப் புறக்கணித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து, சரியான முறைகளைப் பிரயோகிக்க வேண்டுமென்பதுடன் இவ்வகை இலகுவான வினாக்களுக்கான முழுமையான புள்ளிகளையும் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் தமது எண்கணிதத் துல்லியத்தன்மையையும் மேம்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**வினா இல. 06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா பிரதானமாக, சமப்பாட்டுப் பகுப்பாய்வு மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது. விசேடமாக சமப்பாட்டுப் புள்ளி மற்றும் பாதுகாப்பு எல்லை ஆகியவற்றை அலகுகளில் கணிப்பது பற்றிக் கவனஞ் செலுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் மாதமொன்றுக்கான நிலையான கிரயத்தைக் கணித்திருக்கவில்லை. அவர்கள் சமப்பாட்டுப் புள்ளியைக் கணிப்பதற்கு வருடாந்த நிலையான கிரயத்தை நேரடியாகப் பிரயோகித்திருந்தனர். எனவே, பெரும்பாலானவர்களால் முழுப் புள்ளியையும் பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது.

பரீட்சார்த்திகள் இதேவகையான வினாக்களில் பயிற்சியெடுத்தல் வேண்டும்.

## பிரிவு C

**வினா இல. 07** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா பிரதானமாக மாதாந்த அடிப்படையில் காசுப் பாதீட்டைத் தயாரிப்பதன் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

செயலாற்றுகை திருப்திகரமான ஒரு மட்டத்தில் இருந்தது. பல பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் அதேபோன்று எதிர்பார்க்கப்பட்ட செலவு ஆகியவற்றைச் சரியாக கணித்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் கிட்டத்தட்ட 7 – 9 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஒரு சில பரீட்சார்த்திகள் மாதாந்த அடிப்படையிலான காசுப் பாதீட்டினைத் தயாரித்திருக்கவில்லை, அதற்குப் பதிலாக அவர்கள் மொத்தத்தில் முழுக் காலாண்டிற்குமாகத் தயாரித்திருந்தனர்.

பல பரீட்சார்த்திகள் இயந்திரங்களின் கொள்வனவுக் கிரயத்தை ஒரு காசு வெளிப்பாய்வாகக் கருதுவதற்குப் பதிலாக காசு உட்பாய்வாகக் கருதித் தவறாகக் கையாண்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெறுவதற்கு இவ்வாறான அதிக வினாக்களில் பயிற்சிசெய்தல் வேண்டும்.

**வினா இல. 08** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா பிரதானமாக வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் மேந்தலையை ஒதுக்கீடு செய்வதற்கும் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் பகிர்ந்து கொடுப்பதற்கும் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள ஆற்றல் தொடர்பில் கவனஞ் செலுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்தி களால் உற்பத்தி மற்றும் சேவைத் திணைக்களங்களுக்கிடையில் மேந்தலையை ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படை சரியாகப் பிரயோகிக்கப்பட்டிருந்தமை அவர்களது விடைகளிலிருந்து தெரியவந்தது. சேவைத் திணைக்களங்களுக்கும் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையிலும் மேந்தலைக் கிரயத்தினைப் பகிர்வதற்கு சரியான சதவீதங்கள்கூடப் பிரயோகிக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் 7 – 8 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

நேரில் பொருட்கள் மற்றும் நேரில் கூலிகளின் கிரயத்தைக் கருத்திலெடுக்காது கூற்றினைத் தயாரித்திருந்த பரீட்சார்த்திகள் சிலரும் காணப்படுகின்றனர்.

பரீட்சார்த்திகள் இதேபோன்ற வினாக்களில் பயிற்சிபெறுதல் வேண்டும்.

**வினா இல. 09** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா பிரதானமாக கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்குமிடையிலான கணக்கிணக்கம் ஒன்றைத் தயாரிப்பதன் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொக்குகளுடன் தொடர்பற்ற செம்மையாக்கங்களைச் சரியாக அடையாளங் கண்டு கணித்திருந்தனர். அதாவது வருமான வரி மற்றும் தேய்மானம். எவ்வாறாயினும், இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை ஒரு திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் கிட்டத்தட்ட 6 – 9 வரையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பல பரீட்சார்த்திகள், இரண்டு வகைக் கணக்குகளுக்குமிடையேயான கணக்கிணக்கக் கோட்பாடு பற்றிய சரியான புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை. மேலும் தொக்குப் பெறுமதியிடலின் தாக்கம் இலாபத்திற்குச் சரியாகச் செம்மையாக்கம் செய்யப்படவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இருவகை இலாபங்களினதும் செம்மையாக்கங்களைத் தனித்தனியாகச் செய்திருந்தனர். சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இரு முறைகளின் கீழும் இலாபத்தைக் கணிப்பிட்டு அவர்களுடைய நேரத்தை வீணடித்திருந்தனர்.

வினாவுக்கு விடையளிப்பதற்கு முன் வினாவைக் கவனமாக வாசிப்பது முக்கியமானதாகும். மேலும், பரிட்சார்த்திகள் கடந்தகால வினாப்பத்திரங்களையும் பாடப்புத்தகத்தையும் படித்துப் பயிற்சிபெறுதலும் வேண்டும்.

## பிரிவு D

**வினா இல. 10** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**பகுதி (A)** {ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 13} பிரதானமாக செயன்முறைக் கிரயவியலில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வினா செயன்முறைக் கணக்கொன்றினைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது.

செயலாற்றுகை திருப்திகரமான மட்டம் வரை இருக்கவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் WIP, அசாதாரண இலாத்தின் பெறுமதி மற்றும் முடிவுப் பொருட்களின் பெறுமதி ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பது தொடர்பில் விழிப்புணர்வின்றியிருந்தனர். அவர்களால் தரப்பட்ட எண்களை நேரடியாக இடுவதற்கு மாத்திரமே முடிந்திருந்தது, விசேடமாக செயன்முறைக் கணக்கிற்கு நேர் பொருட்கள், நேர் கூலி மற்றும் மேந்தலைகளைச் சரியாக இடுவதற்கு முடிந்திருந்ததுடன் பெரும்பாலானவர்கள் அந்தப் பகுதிக்கான புள்ளிகளை மாத்திரமே பெற்றிருந்தனர். முடிவுப் பொருட்களின் பெறுமதி, WIP, ஒடிவுப் பெறுமதி என்பன பெரும்பாலானவர்களால் சரியாக கணிக்கப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் அலகொன்றிற்கான கிரயத்தைக் கணிக்கும்போது சாதாரண நட்டத்தைக் கவனத்திற்கொள்ளாமலிருந்தனர் அல்லது சாதாரண நட்டத்திற்காக ஒரு பிழையான பெறுமானத்தைக் கருத்திலெடுத்திருந்தனர்.

**பகுதி (B) (a)** {ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 8}

முரண்களின் கணிப்பீட்டில் இங்கு பிரதானமாகக் கவனஞ் செலுத்தப்பட்டது. செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. இந்தப் பாடப்பரப்பில் பரீட்சார்த்திகள் தெளிவான அறிவினைக் கொண்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் சூத்திரத்திற்குப் பிரதியீடு செய்த பெறுமானங் களில் பிழை விட்டிருந்தனர். அவர்களில் சிலர் முரண்கள் ‘‘சாதகமானதா’’ அல்லது ‘‘பாதகமானதா’’ என்பது பற்றி எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே, பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு முடியாமற் போயிருந்தது.

பரீட்சார்த்திகள் தங்களது அறிவினை மேம்படுத்துவதற்கு கடந்தகாலப் பரீட்சை வினாப்பத்திரங்கள் மற்றும் அதேபோன்றதான பரீட்சை வினாப்பத்திரங்கள் போன்றவற்றைப் பின்பற்றி பயிற்சியெடுத்தல் வேண்டும்.

**பகுதி B (b)** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 4)

இந்தப் பகுதியில் நியமக் கிரயமிடலின் அனுகூலங்கள் 04 இனைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளிடம் கோரப்பட்டிருந்தது.

இது ஒரு கோட்பாட்டுரீதியான வினாவாகும்.

பல பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளையும் பெறுவதற்கு இயலாமற் போயிருந்தது.
சில பரீட்சார்த்திகள் இதே வினாப்பத்திரத்தின் OTQ வினாக்கள் பிரிவில் எடுத்துக்காட்டப்பட்ட கோட்பாடுகளைப் பயன்படுத்தி இந்த வினாவுக்கு விடையளிப்பதற்கு முயற்சி செய்திருந்தமை அவர்களது விடைகளிலிருந்து தெரியவந்திருந்தது. விசேடமாக OTQ இன் வினா இல. 1.7 (1) இல் ‘‘கம்பனிகளின் சட்டநியதி அறிக்கையிடற் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு நியமக் கிரயமிடல் முறைமை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையாக இந்தக் கூற்றினை மீள எழுதியிருந்தனர்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

**1.** வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

**2.** வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**3.** பரீட்சையின்போது உங்களது நேரத்தினை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**4.** விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

**5.** கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.

**6.** வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**7**. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -